1992 மார்ச் 10]

டி. ஆர். ஓ., நினைத்தாலும் அவர்களால் அந்த இடங்களை அவர்களுக்குப் பட்டா போட்டு கொடுக்க முடியவில்லை, அதற்கு காரணம் ஏற்கெனவே அரசால் ஒரு ஜி. ஓ. வெளியிடப் பட்டிருக்கிறது. அந்த ஜி. ஓ., வின்படி ஏரி புறம்போக்கு, குளம் புறம்போக்கு ஆகியவற்றையெல்லாம் அதிகாரிகள் நினைத்தாலும் பிரித்து கொடுக்க முடியாது, ஆகவே, அந்த ஜி. ஓ.,-வை மாற்றி அரசாங்கம் இன்னொரு ஜி. ஓ., வெளியிட்டால் தான், சட்டமன்ற உறுப்பினர்கள் போகிறபோது அவர்களிடம் கொடுக்கிற கோரிக்கைகளை ஏற்றுக் கொண்டு ஆங்காங்கே இருக்கிற வருவாய்த் துறை அதிகாரிகள் அந்த இடங்களுக்கு பட்டா போட்டு கொடுக்க முடியும். அதை வருவாய்த் துறை பரிசீலிக்குமா என்று கேட்டுக்கொள்ள ஆசைப் படுகிறேன்,

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னைக்கும் மாவட்டத் தலை நகரங்களுக்கும் இன்றைக்கு வெகுதூரம் இல்லை, அதைப்போல எதையெதை கிளாசிபிகேஷன் செய்ய வேண்டுமென்று வருவாய்த் துறை அதிகாரிகள் செய்தாலும், உடனடியாக அதை மாற்றுவதற்கு அரசு தயாராக இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 142, திரு. எம். ஆண்டி அம்பலம். மாண்புமிகு பிற்பட்டோர் நலத் துறை அமைச்சர்.

142—

தம்பிரான் சமூகத்தினரை பிற்பட்டோர் பட்டியலில் சேர்த்தல்,

*5295—திரு. எம். ஆண்டி அம்பலம் :

மாண்புமிகு பிற்பட்டோர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) அரசு இதுவரை வெளியிட்ட மற்றும் திருத்தப் பட்ட சாதிப் பட்டியல்களில் தம்பிரான் என்றழைக்கப்படும் சமூகத்தினர் இடம்பெறவில்லை என்பதை அரசு அறியுமா ?

(ஆ) அது குறித்து அரசுக்கு அந்தச் சமூகத்தினர் ஏதேனும் முறையீடு செய்துள்ளனரா ?

(இ) ஆம் எனில், அந்த சமூகத்தவரை பிற்பட்ட இனத்தவர் பட்டியலில் இடம்பெறத் தகுந்தவர்களா எனக் கண்டறிந்து பட்டியலில் சேர்க்க அரசு முன்வருமா ?

LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

மாண்புமிகு திரு. இராம வீரப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) 'தம்பிரான்' என்று அழைக்கப்படுபவர்கள் பிற்படுத்தப்பட்டோர் பட்டியலில் இடம் பெறவில்லை என்பதை அரசு அறியும்,

(ஆ) மற்றும் (இ): செங்கல்பட்டு எம், ஜி, ஆர், மாவட்ட வீர சைவர்கள் சங்கம் என்ற அமைப்பு 'தம்பிரான்' என்ற சமூகத்தினரை மிகப் பிற்படுத்தப்பட்டோர் பட்டியலில் உள்ள ஆண்டிப் பண்டாரம், ஜங்கம், யோகிஸ்வரர் ஆகிய வகுப்புகளில் ஏதேனும் ஒன்றில் சேர்த்து ஆணை பிறப்பிக்கக் கோரி 1989-ஆம் ஆண்டு ஜூலை மாதம் அரசுக்குக் கோரிக்கை அனுப்பியிருந்தது, இரண்டாவது பிற்படுத்தப்பட்டோர் நலக் குழு 'தம்பிரான்' என்ற சாதியை பிற்படுத்தப்பட்டோர் பட்டியலிலோ அல்லது மிகப் பிற்படுத்தப்பட்டோர் பட்டியலில் உள்ள ஆண்டிப் பண்டாரம், ஜங்கம், யோகீஸ்வரர் ஆகிய வகுப்புகளில் ஏதேனும் ஒன்றில் சேர்ப்பதற்குப் பரிந்துரை செய்யவில்லையாதலால், இக் கோரிக்கை ஏற்றுக் கொள்ளப் படவில்லை,

திரு. எம். ஆண்டி அம்பலம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒருவர் இறந்துபோனால் சங்கு செகண்டி அடித்து மயானம் வரை சென்று அவர்கள் ஈமச்சடங்கு வரை இருக்கிற நிலை இருக்கிறது. அவர்களுக்கு எந்தவிதமான முன்னுரிமையும் இல்லாமல் இருப்பதால் பிற்படுத்தப்பட்டோர் பட்டியலில் தங்களைச் சேர்க்க வேண்டுமென்பது அவர்களுடைய கோரிக்கையாக இருக்கிறது. அந்தக் கோரிக்கை அரசுக்கு வந்துள்ளதா என்பதை அறிய விரும்புகிறேன்,

மாண்புமிகு திரு. இராம வீரப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசுக்குக் கோரிக்கை வந்திருக்கிறது என்பதையும் சொல்லியிருக்கிறேன், ஏன் சேர்க்க இயலவில்லை என்பதையும் தெரிவித்து இருக்கிறேன், ஏனென்றால் இரண்டாவது பிற்படுத்தப்பட்டோர் நலக்குழு மிகத் தீவிரமாக விவரமாகப் பரிசீலித்து அறிக்கைகளையெல்லாம் பெற்றுத்தான் முடிவை அரசுக்கு அனுப்பியிருக்கிறது, நீங்கள் சொல்வதைப் போல அப்படிப்பட்ட சில பணிகளில் ஈடுபடுகிற ஆண்டிப் பண்டாரம், ஜங்கம், யோகீஸ்வரர் போன்ற வகுப்பினர் மிகப் பிற்படுத்தப்பட்டோர் பட்டியலில் சேர்க்கப்பட்டுள்ளனர், ஆனால் 'தம்பிரான்' என்ற பெயரில் ஒரு பிரிவை அந்தக் குழு விசாரித்து சேர்க்கவும் இல்லை. அல்லது அந்த விசாரணையிலே யாரும் தெரிவித்ததாகவும் இல்லை, ஆகவே அந்தக் குழுவினுடைய முடிவை ஒட்டித்தான் இன்றைக்கு அரசு ஆணை பிறப்பித்து இருக்கிறது, ஆகவே இதை இப்போது மறுபரிசீலனை செய்வதற்கு இயலாது,

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. இராம. இராமநாதன்.

முற்பகல் 10-05

திரு. இராம. இராமநாதன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. கஷ்டப்படுகின்ற குடும்பங்கள் எல்லாம் பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் என்கிற வரிசையிலே சேர்க்கப்பட்டு வருகின்றது, சமுதாயத்திலே மிகவும் பின்தங்கிய நிலையிலே இருக்கின்ற இந்த இனத்திலே, இந்தத் துறையிலே சேர்ந்து இருக்கின்றவர்கள், வாழ்க்கையிலே மேம்பாடு அடையவேண்டும், அவர்கள் முன்னேறவேண்டும் என்கிற அடிப்படையில் இன்றைக்கு காவல் தெய்வம், புரட்சித் தலைவி அவர்களுடைய அரசாங்கம் சீரிய முறையிலே இன்றைக்கு செயல்பட்டுக்கொண்டு இருக்கிறது. ஆனால் ஒன்றை நானும்......

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கேள்வியாகக் கேளுங்கள்,

திரு. இராம. இராமநாதன் : ஒன்றைக் கேட்கக் கடமைப்பட்டு இருக்கிறேன். எங்களைப் போன்ற பல பேர்கள் இன்றைக்கு மிகவும் பிற்படுத்தப்பட்ட நிலையில் இருந்து வருகிறார்கள், வாழ்க்கையிலே முன்னேறுவதற்கு வழியில்லாமல் திண்டாடிக் கொண்டிருக்கிறார்கள், எனவே, எங்களைப் போன்ற பல பேர்களை பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் பட்டியலிலே சேர்க்க அரசாங்கம் முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன், (மேசையைத் தட்டும் ஒலி).

மாண்புமிகு திரு. இராம வீரப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் முன்னாலே வேறு ஒரு குறிப்பிட்ட பிரிவைப் பற்றி கேட்கப்பட்டு இருக்கிற கேள்விக்கு விடை அளித்து இருக்கிறேன், பொதுவாகவே, உச்சநீதிமன்றத்தினுடைய தீர்ப்பையொட்டித்தான் இரண்டாவது குழு அரசினாலே அமைக்கப்பட்டது, அந்தக் குழு விரிவாக ஆராய்ந்து பல்வேறு இடங்களுக்குச் சென்று பல கருத்துக்களைப் பெற்று பல கோரிக்கைகளைப் பெற்று, தமிழ்நாட்டிலே இருக்கிற சூழ்நிலைகள் அனைத்தையும் ஆராய்ந்துதான், அரசுக்கு அறிக்கை அளித்துள்ளது, அதையொட்டித்தான், 1985-வது ஆண்டில் அரசு பிற்படுத்தப்பட்டவர்கள் அல்லது மிகவும் பிற்படுத்தப்பட்டவர்கள் அல்லது சீர்மரபினர் என்று பல்வேறு பிரிவுகளை உள்ளடக்கிய சுமார் 200-க்கும் மேற்பட்ட சாதிப் பிரிவுகளை அறிவித்து வெளியிட்டு இருக்கிறது, இதற்குமேல். ஒவ்வொரு பிரிவினரும் தங்களை இப்படி சேர்க்கவேண்டும்

என்ற கோரிக்கையை வைத்துக் கொண்டேயிருக்கின்றனர். அதற்கு எல்லையே இல்லாமல் போய்விடும், ஆகவே தான் அரசு இப்போது அதைப்பற்றி மறுபரிசீலனை செய்வதற்கு இயலாது என்பதைத் திட்டவட்டமாகத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 143. டாக்டர் க. கோபால். மாண்புமிகு கல்வி அமைச்சர்.

143—

நன்னிலம் தொகுதியில் கல்லூரி.

*3278 டாக்டர் க. கோபால் :

மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

நன்னிலம் தொகுதியில் உயர் கல்வி நிலையங்கள்—தொழிற் கல்லூரியோ அல்லது கலைக் கல்லூரியோ—இல்லையாதலால் உடன் ஏதேனும் ஒரு கல்லூரி அமைக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

தற்போது இயலாது,

டாக்டர் க. கோபால் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நன்னிலம் தொகுதி பெரும்பாலும் ஏழை நடுத்தர விவசாயிகள் வாழ்கின்ற தொகுதியாகும், அவர்கள் தங்கள் குழந்தைகளை கல்லூரிக்கு அனுப்புவது என்றால், நன்னிலம் தொகுதியில் இருந்து கும்பகோணத்திற்கோ அல்லது மன்னமங்கலத்திற்கோ அனுப்புகிற சூழ்நிலையில் உள்ளனர். அப்படியே கல்லூரிக்கு அனுப்புவதாக இருந்தாலும், அவர்கள் தினந்தோறும் கல்லூரிக்குச் செல்வதற்கும் விடுதியில் தங்குவதற்கும் மிகவும் சிரமமான சூழ்நிலையில் உள்ளனர். எனவே, இந்தக் கல்வி ஆண்டில் இல்லை என்றாலும் வருகிற நிதியாண்டிலாவது அரசு ஆவன செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தொகுதிக்குத் தொகுதி கல்லூரிகள் ஆரம்பிக்கிற திட்டம் இப்போது அரசிடம் இல்லை, இரண்டாவது ஒரு இடத்திலே நாம் கல்லூரிகளை அமைத்தால், அது அந்த இடத்திலே இருக்கின்றவர்களுக்கு வேண்டுமானால் சௌகரியமாக இருக்கலாமே தவிர, தொகுதியில் இருக்கிற மற்றவர்கள் போய்த்தான்